# மெட்ரோவில் 1.91 கோடி பேர் பயணம்

சென்னை, செப். 12–

மெட்ரோ ரயிலில், 1.91 கோடி பேர் பயணம் செய்து உள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில், பயணியர் போக்குவரத்து அதிகரித்து வருகிறது.

இவ்வாண்டு, ஜனவரியில் இருந்து, ஆகஸ்ட், 31ம் தேதி வரை, ஒரு கோடியே, 91 லட்சத்து, 44 ஆயிரத்து, 307 பேர் பயணம் செய்துள்ளனர். ஆகஸ்ட் மாதத்தில் மட்டும், 29 லட்சத்து, 65 ஆயிரத்து, 307 பேர் பயணம் செய்துள்ளனர்.

ஆகஸ்ட் மாதத்தில், 19 நாட்களில், தினமும் சராசரியாக, ஒரு லட்சம் பேரும்; ஆக., 9ல், 1.14 லட்சம் பேரும்; 14ல், 1.15 லட்சம் பேரும்; 28ல், 1.12 லட்சம் பேரும்; 30ல், 1.30 லட்சம் பேரும் பயணம் செய்துள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்து உள்ளது.